DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Judicial Magistrate, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 119/2019** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | :டாக்டர்.திரு.மாரிராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 07th July 2026.

**எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். அந்த மருத்துவமனையில் 28.12.2016 ம் தேதி மாலை 6.15 மணியளவில் 26 வயது மதிக்கத்தக்க கண்ணன் என்பவர் என் முன்சிகிச்சைக்கு வந்திருந்தார். அவர் தன்னை 28.12.2016 அன்று தன்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, இரண்டு அடையாளம் தெரிந்த நபர்கள் காரில் வந்து

தன்னை வழிமறித்து கைகளாலும், கத்தியின் மறுமுனையாலும் சண்முகநல்லூரில் இருந்து ஊத்துமலை செல்லும் ரோட்டில் சுமார் 1 ½ கிலோ மீட்டர் தள்ளிவைத்து தாக்கயிதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு இருந்த கயாங்கள்

1. 2x1 cm சிதைந்த காயம் வலது முன்னங்கையில் அதிக இரத்தபோக்குடன் காணப்பட்டது.

2. 10–க்கு கால் cm நீளமான சீராய்ப்பு காயம் மார்பின் பின் பகுதியில் பல்வேறு கோடுகளுடன் காணப்பட்டது.

3. 7–க்கு கால் cm நீளமான சீராய்ப்பு காயம் இடது புஜத்தில் லேசான இரத்த கசிவுடன் காணப்பட்டது.

அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று அளித்தேன். **அவரது காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1–க்கு எத்தனை மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக அ.சா.1 க்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையின் படி துலங்குமா என்றால் துலங்காது. அ.சா. 1–க்கு ஏற்பட்ட 1–வது காயம் அவர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று நிலை தடுமாறிகீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. 2–வது காயம் அவர் இருசக்கர வாகனத்தில் வேகமாக முள்காட்டில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்பில்லை. 3–வது காயம் அவர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று நிலை தடுமாறிகீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது

என்றால் வாய்ப்புள்ளது. கத்தியை காட்டி விசாரணை அதிகாரி சட்ட கருத்துறை எதுவும்பெறப்பட்டாரா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.